**IN THE SPECIAL COURT OF FOREST OFFENCE CASES JUDGE,**

**KANNIYAKUMARI DISTRICT AT NAGERCOIL**

**CC.No. 1/2017**

**Deposition of PW.2**

**Name : Chandrasekaran Nair**

**Father's Name :**

**Village :**

**Taluk :**

**Caste :**

**Calling :**

**Religion :**

**Age :**

**Dated : 06.11.2019**

**Solemnly affirmed by Thiru.S.Selvaraj**

**In accordance of the provision of Act 1873.**

**சாட்சி இன்று நீதிமன்றத்தில் ஆஜராகி சத்தியபிரமாணம் செய்யப்பட்டு முதல் விசாரணை**

நான் வேளிமலை வனசரகத்தில் வனவராக பணியாற்றிய காலத்தில் 05.03.2001 அன்று அதிகாலை 5.00 மணியளவில், வனவர் முருகன், வனகாப்பாளர் புஷ்பராஜ் ஆகியோருடன் சேர்ந்து வேளிமலை தெற்குபீட்டில் வாழைக்குழி சராகத்தில் தணிக்கைக்காக ரோந்து சென்றோம். அப்போது மேற்படி வழக்கில் சம்பந்தப்பட்ட 5 எதிரிகளும், 5 பச்சை தேக்குமரங்களை வாளால் அறுத்து, துண்டுகளாக்கி ஆளுக்கொரு துண்டு தலையில் சுமந்து வரும்பொழுது எங்களை பார்த்து, தேக்குகட்டைகளை தரையில் போட்டுவிட்டு தப்பி ஓட முயன்றார்கள். அச்சமயம் சஜேந்திரன் என்பவர் எங்களால் பிடிபட்டார். (ஆஜர் எதிரியை சாட்சி பெயர் சொல்லி அடையாளம் காட்டுகிறார்). மேலும், அவரை விசாரணை செய்து தேக்குமர கட்டைகளை கைப்பற்றி அன்றையதினமே நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்தோம். மேலும், நான் வனசரகராக பணியாற்றிய காலத்தில், மேற்படி வழக்கு சம்பந்தமான குற்றப்பத்திரிகை 'அ' படிவம் என்னால் தயார் செய்யப்பட்டு நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டது. 'அ' படிவம்

அ.சா.ஆ.4 ஆக குறியீடு செய்யப்படுகிறது. இந்த வழக்கின் சம்பவசமயத்தில் வனவராக பணியிலிருந்த முருகன் சுமார் 4 வருடங்களுக்கு முன்பு இறந்துவிட்டார்.